https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# குறுந்தொகையில் பண்டைத் தமிழரின் நில அமைப்பில் தொழில்கள்

**சி. கவிதா**
முனைவர்பட்ட ஆய்வாளர், பகுதி நேரம்
தமிழ் உயராய்வு மையம், யாதவர் கல்லூரி (தன்னாட்சி)
மதுரை - 625 014

**முனைவர் மா. நடராசன்**
இணைப்பேராசிரியர், நெறியாளர், தமிழ் உயராய்வு மையம்,
யாதவர் கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 625 014.

## ஆய்வுச்சுருக்கம்

*சங்ககால மக்களின் தொழிலானது அம்மக்கள் வாழும் வாழ்விடம் மற்றும் வாழ்க்கை நிலையினை எடுத்துரைப்பது ஆகும். அம்மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்நிலங்களுக்கு உகந்த தொழிலினை மேற்கொண்டு அதன் வழி செம்மையுற வாழ்ந்தனர். இவர்கள் "உழைப்பே உயிர் என எண்ணி வாழ்ந்தனர்" என்பதை இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது.*

## முன்னுரை

*சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகும். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகை 'நல்ல' என்ற அடைமொழியுடன் சிறந்து விளங்குகின்றது. இந்நூல்கள் தமிழர்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் பெட்டகமாகும். இக்குறுந்தொகையானது கடவுள் வாழ்த்தோடு 401 பாடல்களைக் கொண்டுள்ளது. இதனைத் தொகுத்தவர் பூரிக்கோ. தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை. இந்நூல் முதற்பொருள், கருப்பொருள்களை விட உரிப்பொருளுக்கே பேரிடம் அளிக்கிறது. குறுந்தொகையின் மூலம் பண்டைத் தமிழரின் நில அமைப்பில் தொழில்கள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## நிலப்பாகுபாடு

*குறிஞ்சி என்பது மலையும், மலை சார்ந்த இடமுமாகும். முல்லை என்பது காடும் காடு சார்ந்த இடமுமாகும். மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த இடமுமாகும். நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த இடமுமாகும். பாலை என்பது மணலும் மணல் சார்ந்த இடமுமாகும். இவ்வாறு நிலத்தின் தன்மைகளுக்கேற்ப அவை, ஐந்தாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொல்காப்பியர்,*

> "மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வருணன் மேய பெருமணல் உலகமும்
> முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
> சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" [1]

*என்று நிலத்தின் வகைகளை நான்காகப் பார்க்கின்றார். அவற்றுள் முல்லையும், குறிஞ்சியும்*

*தன் இயல்பில் மாறி வறண்ட நிலமாக மாறுவது பாலை நிலமாகும் என்பதனைச் சிலப்பதிகார,*

**"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**நல் இயல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"**[2]
*பாடலடிகள் விளக்குகின்றது.*

### வினையே ஆடவர்க்கு உயிர்

*ஒரு மனிதனின் வாழ்க்கை சிறந்து விளங்குவதற்கு அடிப்படைக் காரணமாக விளங்குவது தொழில்களேயாகும். பண்டைத் தமிழ் மக்கள் தொழில் முயற்சி உடையவர்களாகவும் அத்தொழில்கள் மூலம் செல்வம் ஈட்டி நல்வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதனையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.*

**"வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்**
**மனைஉறை மகளிர்க்கு ஆடவர்**
**உயிர்"** *(குறுந்.135:1-2)*
*என்ற குறுந்தொகைப் பாடலடிகள் இவ்வுலகில் வாழும் ஆண்களுக்கு தொழில் புரிவது தான் உயிராகவும், இல்லத்தில் வாழும் மகளிருக்கு அவ்வாடவர்களே உயிராக உள்ளனர் என்று இருவரின் தொழில் கடமையை அழகாக உணர்த்துகிறது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பண்டைத்தமிழர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான உணவுப்பொருட்களைத் தயாரித்துச் சேகரித்து வைத்திருந்தனர். அவர்கள் தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல், தினைவிதைத்தல், ஆநிரை மேய்த்தல், வேளாண்மை செய்தல், களைபறித்தல், மீன் பிடித்தல், உப்பு விளை வித்தல், வழிப்பறி செய்தல் போன்ற தொழில்களை அந்தந்த நிலத்திற்கு ஏற்றார்ப்போல் செய்து வந்தனர்.*

### 1.குறிஞ்சி நிலத் தொழில்கள்

*மலையும் மலைசார்ந்த இடமாகவும் உள்ள குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த பண்டைத் தமிழர்கள் தேனெடுத்தலைத் தங்களின் முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தனர். செடி, கொடிகளை வெட்டி அப்புறப்படுத்தி வேர்களைக் கிளறி கொத்தி நிலத்தைப் பண்படுத்தினார்கள். பண்படுத்திய நிலத்தை ஏரினால் உழாமல் கொத்திக் கிளறி தினையைப் பயிர் செய்தனர் பெரும்பாலும் இந்நில மக்கள் மழையை எதிர்பார்த்தே பயிர் செய்தனர்.*

### தேனெடுத்தல்

*குறிஞ்சி நிலமாகிய மலைப்பகுதிகளில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் மூன்று வகையான தேனினை எடுத்துள்ளனர். அவை, கொம்புத் தேன், பொந்துத்தேன், கொசுத்தேன். இவைகளுள் உயர்ந்த மரங்களிலிருந்து எடுகப்படும் உயர் வகைத் தேனே கொம்புத்தேன் ஆகும். இவை அதிக மருத்துவக் குணம் நிறைந்ததாக இருப்பதால் அதிக விலைக்கு விற்கப்படுகின்றது. பெரும்பாலும் தேனெடுத்தல் தொழிலை ஆடவர்களே அதிகம் மேற்கொள்கின்றனர்.*

*கரிய காம்புகளை உடைய பெரிய அளவிலான தேன்துளிகள் நிரம்பப் பெற்ற குறிஞ்சி மலரில் தேனீக்கள் தேனை எடுத்து தேனடையினை உருவாக்கும் செழுமையான மலைப்பரப்பே குறிஞ்சி நிலமாகும் என்பதை.*

**"கருங்காற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும்"** *(குறுந்-3;3-4)*
*என்னும் குறுந்தொகைப் பாடலடிகளின் வாயிலாக அறிய முடிகிறது. மேலும், தேன் அதிகம் விளையும் மலைநாடு குறிஞ்சி என்பதும் குறிஞ்சி மலரானது பன்னிரண்டு ஆண்டிற்கு ஒருமுறைப் பூக்கும் அதிக சுவை மிகுந்த தேனையுடைய மலராகும்.*

**"கருங்காற் குறிஞ்சி மதன்இல் வான்பூ"**[3]

*என்ற நற்றிணைப் பாடலடி குறிஞ்சி நிலத்திற்கே உரிய மலராகிய குறிஞ்சிப் பூ அந்நிலத்தின் உணவுப்பொருள்களில் ஒன்றாகிய சுவை மிகுந்த தேனைக் கொடுப்பது புலனாகிறது.*

*மலை முகடுகளிலும் உயர்ந்த மரக்கிளைகளிலும் உற்பத்தியாகக் கூடியத் தேனானது அன்று முதல் இன்று வரை உணவுப் பொருளாகவும் சிறப்பு வாய்ந்த மருந்துப் பொருள்களுள் முக்கியமான ஒன்றாகவும் கருதி மக்களால் அதிக அளவுப் பயன் படுத்தப்பட்டு வருகிறது. இன்றளவும் மலைப் பகுதிகளில் வாழும் மக்களிடம் தேன் எடுத்தல் முதன்மைத் தொழிலாக விளங்குகிறது.*

### கிழங்கு அகழ்தல்

*மண்ணுக்கு அடியில் தாவரத்தின், வேர்ப் பகுதியில் விளையும் கிழங்குகளை அவை விளைந்துள்ள நிலத்தின் மண்ணை அகழ்தல் எடுக்கப்படுவது கிழங்கு அகழ்தல் எனப்படும். இத்தொழில் பெண்களுக்கே உரிய ஒன்றாகும் என சங்கஇலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.*

*குறிஞ்சி நிலத்தின் மலைப்பகுதிகளில் பெரிய இலையையுடைய சேப்பங்கிழங்கு முன்பனிக் காலத்தில் நன்கு வளரும். அவ்வாறு வளரும்*

செடியினை,

***"சிலம்பின் சேம்பின் அலங்கல் வள்ளிலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇத்
தன்வரல் வாடை தூக்கும்*** *(குறுந்.76:3-5)*

என்னும் குறுந்தொகைப் பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது. தமிழர்கள் பூமிக்கு மேல் மட்டுமல்லாமல், பூமிக்கு அடியில் விளையக் கூடியக் கிழங்கு வகைகளையும் எடுத்து உணவாக உண்டனர். அக்கிழங்குகளானது ஊட்டச்சத்து, மாவுச் சத்து அதிகம் நிரம்பிக காணப்படுவதால் அக்கிழங்கை உண்ணும் மனிதர்கள் திடமானக் கட்டுக் கோப்பான உடலமைப்பினைப் பெறுகிறனர்.

## தினைவிதைத்தல்

சங்க இலக்கியங்களில் மிகுதியாக இடம் பெறும் தானிய வகை தினையாகும். இவை "ஏனல்" என்றும் குறிப்பிடப்படுகின்றது. மலைவாழ் மக்கள் தம் வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு தினைமாவோடு தேன் கலந்து கொடுத்தனர் என்ற செய்தியின் மூலம் தினை குறிஞ்சி நிலத்தின் முக்கிய உணவாகும் என்பது புலனாகின்றது.

குறிஞ்சி நிலத்தில் வளர்ந்த மரங்களை வெட்டி, கானவன் அந்நிலத்தை பண்படுத்தி உழுது அவற்றில் தினையை விதைத்தான். அத்தினையை கொடிச்சி என்னும் மலைவாழ் பெண்காவல் செய்தால் என்றும் குறுந் தொகைப் பாடல் கூறுகின்றது. இதனை,

***"மரங் கொல் கானவன் புனம்துளர்ந்து வித்திய
பிறங்குகுரல் இறடி காக்கும், புறம் தாழ்
அம்சில் ஓதி அசைஇயல் கொடிச்சி"***

*(குறுந்.214:1-3)*

என்னும் குறுந்தொகைப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றது.

குறிஞ்சி நில மக்களால் அந்நிலத்திற்கே உரிய தொழில்களான தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல், தினை விதைத்தல் போன்ற தொழில்கள் மேற்கொண்டுள்ளனர்.

## முல்லை நிலத் தொழில்கள்

காடும் காடு சார்ந்த நில முமாகிய முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் ஆநிரை மேய்த்தல் தொழிலை மேற்கொண்டுள்ளனர். ஆநிரை மேய்த்தல் தொழிலை மேற்கொண்டதால் இந்நிலத்தில் வாழும் மக்கள் இடையர் எனப்பட்டனர். ஆடு, மாடுகளை காடுகளி லும் காட்டில் உள்ள புல் தரைகளிலும் ஒட்டி மேய்த்தனர். ஆநிரைகளிடமிருந்து கிடைக்கும் பால் உணவு பொருட்களை உணவாக உண்டனர். பாலில் இருந்து தயிர், மோர், வெண்ணை போன்ற பொருட்க ளையும் உற்பத்தி செய்தனர்.

***"ஆயர்கள் ஆடுகளை மேய்த்தனர். அதனோடு வேளாண்மை தொழிலையும் சிறிது மேற்கொண்டனர். முல்லைநில மக்களின் வாழ்க்கை முறையானது துன்பம் நிறைந்ததாகவே காணப்பட்டது. முதுகில் ஓலை, தோளில் தோற்பை, கையில் கோலுடன் மந்தைகளின் பின்னால் சென்று ஆயர்கள் கடினமாக உழைத்தனர். சாரல் மழையில் நனைந்து முகம் வழியாக நீர் வழிய, குளிரை பொருட்படுத்தாது பணியாற்றினர்"***[4] என்று முல்லை நில மக்களின் தொழில் குறித்து வே.தி.செல்லம் கூறுவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

பனை ஓலையால் செய்த குடையைக் கையில் வைத்துக் கொண்டு இடையர்கள் தங்கள் மந்தையில் இருக்கும் குட்டிகளை யுடைய ஆடுகளுடன் வயலிலேயே தங்கினார்கள் என்ற செய்தியை,

***"பறியுடைக் கையர் மறிஇனத்து ஒழிய"*** *(குறுந்.221:1-2)*

என்னும் குறுந்தொகை பாடலடிகள் விளக்குகிறது.

இடையர்கள் கோலுடன் பசு, எருமை, ஆடு ஆகிய ஆநிரைகளை முல்லை நிலம் மட்டுமல்லாது வேறு நிலங்களிலும் மேய்ச்சலுக்காக இடம் பெயர்ந்து ஓட்டிச் சென்றனர் என்பதை,

***"ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடைஇன நிரை வேறு புலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்போடு கலங்கிக் கோடல்"***[5]

என்ற நெடுநல்வாடைப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

முல்லை நிலத்தின் முக்கியத் தொழில்களில் ஒன்றாகிய ஆநிரை மேய்த்தல் பண்டைக் காலத்தில் காணப்பட்டதை விட இன்றையக் காலத்தில் பல மடங்கு குறைந்து விட்டது. இக்காலத்தில் எல்லா நிலங்களில் வாழும் மக்களும் தங்களின் தேவைகளுக்கு ஏற்றாற் போல் ஆநிரைகளை வளர்ந்து வருகின்றனர்.

## மருத நிலத் தொழில்கள்

காடுகளை அடுத்துள்ள சமதளப் பரப்பில் ஏரிகள், ஆறுகளைக் கொண்டு அமைந்திரு க்கும் நிலப்பகுதி மருத நிலமாகும். மருத நிலத்தின் முதன்மையானத் தொழிலாக வேளாண்மை விளங்குகின்றது. இந்நில மக்களின் வாழ்க்கை முறையானது மற்ற நிலத்து மக்களின் வாழ்க்கையை விட

பலமடங்கு உயர்ந்ததாகவே விளங்கியது. தங்களிடம் அதிகளவு ஓய்வு நேரம் கிடைத்ததால் மருதநில மக்கள் நாகரிகம் மற்றும் பண்பாட்டினை வளர்க்கும் முனைப் பில் ஈடுபட்டனர். உலகத்தின் எல்லா நாடுகளிலும் உள்ள ஆற்றங்கரை மற்றும் ஏரிக்கரைகளில் தான் மக்களின் நாகரிகம் தோன்றம் பெற்றது.

*"நாட்டின் எல்லாப் பகுதியிலும் விவசாயம் நடைபெற்றது. ஆயினும், ஆறுகள் கடலோடு கலக்கும் இடமாகிய மருத நிலப்பகுதியில் மிகுதியாக நடைபெற்றது. முக்கியமாக நெற் பயிரோடு, வரகு முதலிய சிறுதானியங் களும் பயிரிடப்பட்டன. தானிய சாகுபடி நிலமாக மருதம் அழைக்கப்பட்டது. விவசாயி களை உழவர்கள் என்றும், அவர்தம் மகளிரை உழத்தியர் என்றும் கூறினர். இந்திரனைத் தொல்காப்பியர் வேந்தன் என்பார். அவ்வேந்தனே மருத நில கடவுளாக மக்கள் வழிபட்டனர். பருவ மழையின் தெய்வம் என்று உழவர்கள் இந்திரனையே வழிபட்ட னர்"*[6] என்று ந.சுப்பிரமணியன் கூறுவது சுட்டிக்காட்ட தக்கது.

நிலவளமும், நீர் வளமும் உள்ள மருத நிலத்தில் மண் வளம் மிக்க வயல்களில் ஏர் பூட்டி நிலத்தை உழுது, பண்படுத்தி, எருவிட்டு, விதை விதைத்து, நீர் பாய்ச்சி நெல்லை விதைத்தனர்.

### வேளாண்மைத் தொழில்

பண்டைத் தமிழரின் வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பிடிப்பது வேளாண்மையாகும். இது பண்டைக் காலம் முதல் இக்காலம் வரை மனிதன் வாழ்க்கை யில் அவசியமான ஒன்றாகக் கருதிப்படுகி ன்றது. மேலும், ஒரு நாட்டின் முதுகெலும் பாகவும் வேளாண்மை விளங்குகின்றது.

*"வேளாண்மையைக் குறிக்க 'Agriculture' என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. 'Agriculture என்பது இலத்தீன் மொழியிலி ருந்து ஆங்கிலந்திற்கு வந்ததாகும். 'Agri' என்றால் வயல் என்றும், 'Field, culture என்றால் பண்படுத்தல். Cultivate என்றும் பொருள் கொள்கின்றனர்"*[7] என்று அ.மு. பரமசிவானந்தம் குறிப்பிடுகின்றார். இவற்றை உற்று நோக்கினால் நிலத்தை நல்ல வகையில் மற்றவர்களுக்கு வேண்டிய உணவு முதலிய வற்றை கொடுக்கும் வகையில் நல்ல பயிர் விளையும் வகையில் பண்படுத்துதல் Agriculture ஆகும்.

மருத நில மக்கள் தங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக வேளாண்மையின் முக்கியப் பயிராகிய நெல்லைப் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டினர்.

*"செந்நெல் வான்பொரி சிதறியன்ன*
*எக்கர் நண்ணிய எம்ஊர் வியன்துறை"*

என்னும் குறுந்தொகைப் பாடலடிகள் மூலம் மருத நிலத்தில் செந்நெல் விளைவிக்கப் பட்டது என்பது உறுதியாகின்றது.

*"பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண்*
*கழை நிலை பெறாஅக் காவிரி நீத்தம்"*[8]

என்ற அகநானூற்றுப் பாடலடிகளின் மூலம் ஆற்றங்கரையின் அருகிலிருக்கும் சமதளப் பரப்பாகிய மருத நிலத்தில் வேளாண்மைத் தொழிலின் விளைவாக நெற் பயிரானது கொத்துக்கொத்தாக விளைந்து தொங்குகின்ற செய்தியை அறியமுடிகிறது. பண்டைக்காலம் மட்டுமல்லாது இன்றையக் காலக்கட்டதிலும் செந்நெல், வெண்ணெல் போன்றவை முக்கிய உணவுப்பொருளாக உட்கொள்ளப் பட்டு வருகிறது.

### நெய்தல் நிலத் தொழில்கள்

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும். இங்கு வாழும் மக்கள் கட்டு மரங்களிலும் படகுகளிலும் கடலினுள் வெதூரம் சென்று வலை வீசி மீன்பிடித்து வந்து அம்மீனை விற்றுக் கிடைத்த தானியங்களை உணவாக உண்டு வாழ்ந்தனர். மேலும், விற்றது போக மிஞ்சிய மீன்களை உப்பிட்டுப் உலர்த்திக் பதப்படுத்தி கருவாடு செய்து விற்றார்கள். சில இடங்களில் கடற்கரையோரங்களில் உப்பளங்கள் இருந்தன. அந்த அளங்களில் கடல் நீரைப் பாய்ச்சி உப்பு விளைவித்தனர்.

நெய்தல் நிலத்து மக்களும் முல்லை நில மக்களைப் போலவே கடினமான வாழ்க்கை முறையினை வாழ்ந்தனர். *"பழங்காலத் தமிழர்கள் வருணன் என்னும் கடல் தெய்வத்தை வழிபட்டார்கள்"*[9] எனக் கூறுகிறார் மயிலை சீனி வேங்கடசாமி.

### மீன் பிடித்தல்

மீனவர்கள் படகில் இருந்த படியே ஒரு மூங்கிலின் நுனியில் கட்டப்பட்ட கூர்மையான எரிஉளி என்னும் ஆயுத்தை வீசி சுறாமீனைக் கொல்வர். அந்த மூங்கிலின் மறுநுனியில் கட்டிய கயிற்றை இழுத்து தாம் கொன்ற மீனைக் கைப்பற்றுவர். இதனை,

*"கொல்வினைப் பொலிந்த கூர்வாய் எறிஉளி*
*முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்*
*தாங்குஅரு நீர்ச்சுரத்து எறிந்து வாங்குவிசைக்*
*கொடுந்திமிற் பரதவற் கோட்டுமீன்*
*எறிய"* (குறுந். 304:1-4)

என்னும் பாடலடிகள் விளக்குகின்றது. இவற்றின் மூலம் நெய்தல் நிலத்தில் மீனவர்களின் மீன் பிடிக்கும் முறையினைப் பற்றி நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

"குறியிறைக் குரம்பைக் கொலை வெம் பரதவர்
எறிஉளி பொருத ஏமுறு பெரு மீன்
புண் உமிழ் குருதி புலவுக் கடல் மறுப்பட"[10]

என்ற அகநானூற்றுப் பாடலடிகளின் வாயிலாக பரதவர் என்னும் நெய்தல் நிலமக்கள் மீன்களைப் பிடிப்பதில் ஆர்வம் கொண்டவர்கள் என்பதும், அறிஉளியைப் பயன்படுத்தி பெரிய மீன்களையும் பிடிப்பர் என்பதனையும் தெரிந்து கொள்ள முடிகின்றது.

## பாலை நிலத்தொழில்கள்

மணலும் மணல் சார்ந்த பகுதியும் பாலை நிலமாகும். இங்கு வற்றிய சுனையும், நீரில்லா கிணறு போன்றவையே உள்ளது. இந்நிலத்தில் எவ்வளமும் இல்லாத காரணத்தால் வழிப்பறி செய்தல் தொழிலை இந்நில மக்கள் மேற்கொள்கின்றனர். அவர் களது தொழிலின் விளைவாய்க் கிடைக்கும் சூரையாடியப் பொருள்களை உண்டு வாழும் கட்டாயத்தில் பாலைநில மக்கள் உள்ளனர்.

## வழிப்பறி செய்தல்

பாலை நிலத்தில் உள்ள எயினர்கள் வழிப் போக்கர்களைக் கொன்றும், அவர்களிடம் உள்ள பொருளைக் கொள்ளையிட்டும் அப்பொருளைக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். இதற்காக அம்பைத் தீட்டிக் கொண்டிருந்த காட்சியை,

"உலைக்கல் அன்ன பாறை ஏறிக்
கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்"
(குறுந். 12:2-3)

என்னும் குறுந்தொகைப் பாடலடிகள் புலப் படுத்துகின்றன. பாறைகளின் மேலே ஏறிநின்று வழிப்போக்கர்கள் வருவதைப் பார்த்துக் கொண்டே வளைந்த வில்லை யுடைய பாலைநில எயினர்கள் தங்கள் அம்புகளைத் தீட்டிக் கொண்டிருப்பர் என்பதை உணர்த்துகிறது. இன்றைய காலக்கட்டத்திலும் மக்களிடையே வழிப்பறி, கொலை, கொள்ளை போன்ற செயல்கள் காணப்படுகின்றது. இருப்பினும், பண்டைக் கால மக்கள் அதனை வேறு வழியின்றி உணவிற்காகச் செய்தனர் என்பதை உணர முடிகின்றது.

## முடிவுரை

பண்டைத் தமிழர்கள் தாங்கள் வாழ்ந்த நில அமைப்பிற்கு ஏற்றார்போல் தொழில்களைச் செய்து தங்கள் வாழ்க்கையை வாழ்ந்தனர். ஒவ்வொரு நிலத்திலும் உள்ள மக்கள் அத்தொழில்களின் மூலம் தங்களின் வாழ்விற்குத் தேவையானவற்றைப் பூர்த்தி செய்து கொண்டனர். தொழில்தான் ஒரு மனிதனின் முக்கியமான ஆதாரமாக இருக்கின்றது. அத்தொழிலின் மூலமாகத் தான் மக்களின் வாழ்க்கை மேம்படும் என்ற செய்தியும் இக்கட்டுரையின் மூலம் அறியப்படுகிறது.

## அடிக்குறிப்புகள்

1. தொல். பொருள். இளம். நூ.5.
2. சிலம்பு. காடுகாண். 64 - 66.
3. நற். 268:3.
4. வே.தி.செல்லம், தமிழக வரலாறும் பண்பாடும், ப.143.
5. நெடுநல்.3-5.
6. ந.சுப்பிரமண்யன், சங்க கால வாழ்வியல், ப.300.
7. அ.மு.பரமசிவானந்தம், சமுதாயமும் பண்பாடும், ப.219.
8. அகம்.6:5-6.
9. மயிலை சீனி வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிபம், ப.75.
10. அகம். 210:1-3.

## துணைநூற் பட்டியல்

1. பரமசிவானந்தம்., அ.மு., சமுதாயம் பண்பாடும், தமிழ்கலைப் பதிப்பகம், சென்னை, 1972.
2. இளம் பூரனார் (உ.ஆ) தொல்காப்பியம் பொருளதிகாரம் கழக வெளியீடு, சென்னை, 1956.
3. சண்முகம் பிள்ளை. மு., குறுந்தொகை மூலமும் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1994.
4. சோமசுந்தரனார். பொ. வே., அகநானூறு, கழக வெளியீடு, சென்னை, 1965.
5. சோமசுந்தரனார். பொ.வே., நெடுநல்வாடை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2007.
6. சுப்பிரமணியன்., நா., சங்க கால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010.
7. பரமசிவம்.சு.கோ., நற்றிணை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1994.
8. மாணிக்கவாசகன். ஞா., சிலப்பதிகாரம் உமா பதிப்பகம், சென்னை, 2015.
9. மயிலை சீனி வேங்கடசாமி., பழங்கால தமிழர் வாணிபம், வசந்தா பதிப்பகம், சென்னை, 2003.
10. செல்லம்.வே.தி., தமிழக வரலாறும் பண்பாடும் மணிவாசகர் பதிப்பகம், சென்னை.